**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி</u>**
**<u>அசல் வழக்கு எண்.68/2007</u>**
**<u>நாள் : 07/12/2022, புதன்கிழமை</u>**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - வசந்தா | க/பெயர் - ரங்கசாமி |
| வயது - 57 | தொழில் - |
| விலாசம் - எண்.115, கும்மிடிப்பூண்டி பஜார் வீதி, கும்மிடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். | |

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> (PW1)**

எனக்கு 1986ல் திருமணம் நடந்தது. எனது கணவரின் சொந்த ஊர் அரக்கோணம். திருமணம் ஆகி அரக்கோணத்தில் சில வருடங்கள் வாழ்ந்துவிட்டு பின்னர் எனது தகப்பனார் ஊருக்கு வந்துவிட்டோம். தங்கள் தகப்பனார் தங்கள் பெயரிலும், குணசுந்தரி பெயரிலும் 14 சென்டு வாங்கினாரா என்று கேட்டால் வாங்கவில்லை. எனது தகப்பனார் பெயரில்தான் வாங்கினார். உங்கள் தகப்பனார் வாங்கிய 14 சென்டிற்கு பாதை ஹரிகிருஷ்ணன் மற்றும் கஜபதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் 2 அடி பாதையுடன் அந்த சொத்தை நீங்களும், உங்கள் தங்கையும் எடுத்துக்கொள்ளுங்கள் உங்கள் தகப்பனார் கூறினார் என்றால் சரிதான். ஆனால் இதுநாள் வரையில் நாங்கள் எடுத்துக்கொள்ளவில்லை. 2 அடி பாதையுடன் கூடிய 14 சென்டை இந்த வழக்கின் சொத்து விவரத்தில் சேர்க்கவில்லை என்று கேட்டால் எனக்கு நியாபகம் இல்லை. வழக்கில் 14 சென்டின் சர்வே எண்.335/3ஏ என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால்

சரிதான். இந்த 14 சென்டு நிலம் ஹரிகிருஷ்ணன் மற்றும் கஜபதி வீட்டிற்கு பின்னால் உள்ளது என்றால் சரிதான். ஹரிகிருஷ்ணன் மற்றும் கஜபதி வசிக்கும் இடத்தில் நாராயணமூர்த்தி மற்றும் ஜானகிராமன் வசிக்கிவல்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் தாவா சொத்துக்கள் இருக்கும் பகுதியில் சுமார் 20 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். நாராயணமூர்த்தி மற்றும் ஜானகிராமன் எந்த இடத்தில் வசிக்கிறார்கள் என்று கேட்டால் முதலில் எனது தகப்பனார் வீட்டில் வசித்தார்கள். தற்போது எங்கு வசிக்கிறார்கள் என்பது தெரியாது. சொத்து விவரத்தில் 3வது அயிட்டமாக குறிப்பிட்டுள்ள இடத்தின் மொத்த பரப்பளவு 12½ சென்டு என்றால் சரிதான். அந்த இடம் எனது தகப்பனார் வாழ்ந்த இடமாகும். அந்த இடத்தில் நாராயணமூர்த்தி மற்றும் ஜானகிராமன் வீடு கட்டியுள்ளார்களா என்று கேட்டால் தெரியாது. அந்த இடத்தில் சேதமடைந்த பழைய வீடு உள்ளது. சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள 4 மற்றும் 5வது அயிட்ட சொத்துக்கள் தங்களது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்திலேயே விற்பனை செய்யப்பட்டுவிட்டது என்றால் எனது தகப்பனார் இருந்த வரையில் விற்கவில்லை. அதன் பிறகு விற்பனை செய்தார்களா என்பது தெரியாது. 6 மற்றும் 7வது அயிட்ட சொத்துக்களை ஹரிகிருஷ்ணன், நாராயணமூர்த்தி மற்றும் ஜானகிராமன் ஆகியோர்கள் எடுத்துக்கொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 8வது அயிட்ட சொத்துக்கள் கஜபதி வசம் உள்ளது என்றால் சரியல்ல. அது பொதுசொத்து. கும்மிடிப்பூண்டியில் சர்வே எண்.581/2ல் உங்களுடைய தகப்பனார் உங்கள் பெயரிலும், குணசுந்தரி பெயரிலும் தலா ஒரு வீட்டு மனை வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது கணவர் தையல் வேலை செய்து வந்தார். தற்போது சினிமா துறையில் துணை நடிகராக

நடித்து வருகிறார். கிருஷ்ணவேணி அம்மாளுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.343 கும்மிடிப்பூண்டி கிராம சொத்தை தங்கள் பெயரிலும், குணசுந்தரி பெயரிலும் தங்கள் தகப்பனார் வாங்கி வைத்தார் என்றால் சரியல்ல. தங்கள் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்திலேயே உங்கள் சகோதரர்களுக்கிடையே வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த வாய்மொழி பாகப்பிரிவினையில் ஒவ்வொரு ஆண் மகனுக்கும் 2¾ ஏக்கர் விவசாய நிலமும், 9 சென்டு வீட்டு மனையும் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. அந்த பாகப்பிரிவினையின் அடிப்படையில் தான் தங்களுக்கு நேரடியாக இடத்தை கிரையம் செய்து தங்கள் பெயருக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்தார் என்றால் சரியல்ல. பெரிய சோழியம்பாக்கத்தில் எனக்கு பாகமாக வந்த 75 சென்டு நிலத்தை விற்று நான் பணம் பெற்றுக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் என்னிடம் கையொப்பம் பெற்று இடத்தை வாடகைக்கு விட்டார். பி.த.சா.ஆ.1 சொத்து விவரத்தில் வசந்தா மனைக்கு மேற்கு மற்றும் கஜபதி மனைக்கு தெற்கில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். டீ கடைக்கு எதிர்பக்கம் கஜபதி வீடு உள்ளது என்றால் சரிதான். தங்களுக்கு ஏற்கனவே பி.த.சா.ஆ.1ன் படி பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்றும், கஜபதி அவருடைய இடத்தில் தான் வீடுகட்டி வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை ஏற்படவில்லை. தற்போது ஹரிகிருஷ்ணன் மற்றும் கஜபதி கட்டிய வீட்டிலும் பாகம் கேட்டு (பொது சொத்து) வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நாராயணமூர்த்தி விஜயலட்சுமியின் மகளை திருமணம் செய்துக்கொண்டார். இந்த வழக்கில் நாராயணமூர்த்தி,

விஜயலட்சுமி மீதும் வழக்கு போட்டுள்ளோம். அவர்கள் ஏன் நடத்தவில்லை என்று தெரியாது. நாராயணமூர்த்தி மீண்டும் பாகப்பிரிவினை வழக்கு நடத்தினால் அவருக்கு மேலும் ஒரு பாக சொத்து வரும் என்பதால் தான் வழக்கு நடத்தவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நாராயணமூர்த்திக்கு பாகமாக வந்த சொத்துக்களை முழுமையாக அவர் விற்பனை செய்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நாராயணமூர்த்தி 1வது அயிட்ட சொத்தை தற்போது வீட்டு மனைகளாக பிரித்து விற்பனை செய்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தங்கள் தகப்பனார் ஏற்கனவே தங்களுக்கு பாகம் கொடுத்துவிட்டதால், மீண்டும் பாகம் கேட்டு பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**//கையொப்பம்//**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**